

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

**RHODE ISLAND TAMIL SCHOOL**
**ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி**

# பிப்ரவரி செய்திமடல்

__பொருள்:__

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே
என உரிமை கொண்டாடுவர்;
அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி
ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

Those who are destitute of love
appropriate all they have to themselves;
but those who possess love consider
even their bones to belong to others

## நம் பள்ளியும்!! பொங்கல் கொண்டாட்டமும்!!

நமது ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி வளாகத்தில், கடந்த ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் இனிதாக கொண்டாடப்பட்டது.

இதில் நம் பள்ளி மாணவர்கள் மழலை முதல் நிலை 5 வரை தங்களின் திறனை, பொங்கல் கலைப் படைப்புகளாகவும், வண்ண ஓவியங்களாகவும், காட்சிப்படுத்தியது மிகவும் சிறப்பாகவும் கலை உணர்வு கொண்டதாகவும் அமைந்தது.

மேலும் நிலை 6 முதல் நிலை 8 வரை உள்ள மாணவர்கள் தங்களின் திறனை, பொங்கல் பண்டிகை பற்றிய பேச்சுகளாகவும், பாடல்களாகவும் , கவிதைகளாகவும் அவர்களின் அழகான காந்தக் குரலில் வெளிப்படுத்திய விதம் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

இறுதியாக பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைவருக்கும் நம் பள்ளியின் சார்பாக இனிப்புப் பொங்கல் வழங்கப்பட்டது.


மொத்தத்தில் நமது பள்ளியின் பொங்கல் பண்டிகை கொண்டாட்டத்தில் பங்கேற்ற , அனைவரின் கண்களுக்கும், செவிகளுக்கும், வயிற்றுக்கும் இனிய விருந்தாக அமைந்தது.

## வார்த்தைகளை கண்டுபிடியுங்கள் !!




| | | | | | |
|---|---|---|---|---|---|
| கோ | ழி | மா | ன் | ன | ட |
| வா | த் | து | கு | ரு | வி |
| கா | கொ | க் | கு | தே | ள் |
| க | மீ | மு | கு | பை | எ |
| ம் | ன் | த | தி | எ | று |
| ஆ | மை | லை | ரை | லி | ம் |
| ஐ | ன | க | ர | டி | பு |

## தவளை குளத்திற்கு செல்ல சரியான வழியை கண்டுபிடியுங்கள் !!!



## முத்தமிழ் முத்துக்கள்

### இசை: பாகம் 1
### தவில்


தவில், நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற ஒரு பிரதான வாத்திய கருவியாகும். விழாக்காலங்களிலும், திருமணம், குழந்தைகள் காதுக்குத்து, கர்நாடக இசை, கிராமிய இசை போன்ற நிகழ்ச்சிகளுக்கு இதன் பயன்பாடு அதிகம்.


தவில் என்பது நாதஸ்வரத்திற்குத் துணையாக வாசிக்கப்படும் ஒரு தாள இசைக்கருவியாகும். இக்கருவி தோற்கருவி வகையைச் சார்ந்ததாகும். தோம்பு உருவத்தில் மரத்தால் செய்யப்பட்டிருக்கும். இந்தக் கருவியில் ஒரு பக்கம் மறு பக்கத்தைவிடச் சற்று பெரியதாக இருக்கும். இதனை மேள வாத்தியம் என்றும், இராட்சச வாத்தியம் என்றும் அழைப்பர். தற்போது கிளாரினெட், வயலின், மெண்டலின் கருவிகளோடும் சேர்ந்து இசைக்கப்படுகிறது.

__தவிலின் சிறப்பம்சம்:__ நாதஸ்வர கச்சேரிகளில், நாதஸ்வரம் தான் பிரதான வாக்கியம். ஆனால், அக்கச்சேரிகள் தொடங்கும்போது தவில் வாசிப்போடு தான் தொடங்குவார்கள், அது தவில் வாத்தியத்தின் சிறப்பம்சம்.

__தவிலின் வரலாறு:__ தவில் தமிழகத்தின் தஞ்சையில்தான் பிறந்தது. மேலும் தவில் வாத்தியம் பற்றிய குறிப்புகள் 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் 12 இடங்களில் இடம்பெற்றுள்ளது.

## வானவில் சாம்பார்





“இன்று மதிய உணவிற்கு என்ன சமைக்கலாம்?” என்று கேட்டார் பாட்டி.

“இன்று வானவில் சாம்பார் செய்யலாம், பாட்டி!” என்றாள் பவ்யா.

“வானவில் சாம்பாரா! அதை எப்படிச் செய்வது?” என்று வியந்தார் பாட்டி.

“நான் செய்து காண்பிக்கிறேன், பாட்டி!” என்றாள் பவ்யா.

ஊதா வண்ண 'கரு முரு' வெங்காயம்
கருநீல வண்ண குண்டுக் கத்தரிக்காய்

நீல வண்ணக் கைப்பிடி கொண்ட கத்தியால்,
இவற்றைச் சிறுதுண்டுகளாக நறுக்க வேண்டும்.
பச்சை வண்ண ஒல்லியான, நீளமான முருங்கைக்காய்

மஞ்சள் வண்ண வட்டவட்ட
துவரம் பருப்பு

ஆரஞ்சு வண்ண 'கருக்' என்று கடிபடும் கேரட்

சிவப்பு வண்ண சாறு நிறைந்த தக்காளி

இவற்றை எல்லாம் நன்கு கழுவி, நறுக்கி, துண்டுகளாக்கி
ஒரு சட்டியில் போடவேண்டும்.

சற்றே இனிக்கும் பழுப்பு வண்ணப் புளியைக் கரைத்து விட்டு,
காரமும் மணமும் நிறைந்த
மஞ்சள் வண்ண சாம்பார் பொடியும், உப்பும் சேர்க்கவேண்டும்.

எல்லாவற்றையும் வதக்க வேண்டும்.

நன்றாகக் கலக்க வேண்டும்.

லேசாக தீயில் வைத்து கொதிக்கவிட வேண்டும்.

இப்படித்தான்
வானவில் சாம்பார்
செய்ய வேண்டும்!

## நினைவு நாளேடு

### ஜனாதிபதிகள் தினம்

பிப்ரவரியில் ஒவ்வொரு மூன்றாவது திங்கட்கிழமையும் ஜனாதிபதிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

முதலில், அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனின் பிறந்த நாள் (பிப்ரவரி 22), விடுமுறையாகக் கொண்டாடப்பட்டது. பின்னர், அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் (பிப்ரவரி 12) பிறந்தநாளையும் கொண்டாடும் வகையில், பிப்ரவரி மூன்றாவது திங்கட்கிழமை, ஜனாதிபதிகள் தின விடுமுறையாக மாற்றப்பட்டது.

### சர்வதேச தாய்மொழி தினம்

மக்கள் எத்தனை மொழியை தங்களது ஆர்வத்தின் காரணமாக கற்றுக்கொண்டாலும், தாய்மொழி பற்று இருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த வகையில், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21-ம் தேதி சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. பன்மொழி கலாசாரத்தை அனுசரிக்கவும், ஆதரிக்கவும் சர்வதேச தாய்மொழி தினம் கொண்டாடப்படுகிறது.

நம்பிக்கை உண்டானால் வெற்றியுண்டு , அந்த நம்பிக்கையின் முக்கிய லட்சணம் விடாமுயற்சி
- பாரதியார்



RHODE ISLAND TAMIL SCHOOL
ரோட் ஐலண்ட் தமிழ்ப்பள்ளி



ஒரு சிறந்த புத்தகத்தை படிப்பதும், அதை தன் வசப்படுத்திக் கொள்வதும் வாழ்க்கையின் தரத்தை எல்லையில்லா அளவிற்கு உயர்த்தும்.
-அப்துல் கலாம்

# பிப்ரவரி செய்திமடல்

## குறுக்கெழுத்து போட்டி




குறுக்கெழுத்து போட்டியில் சொற்கள் மேலிருந்து கீழும், கீழிருந்து மேலும், இடமிருந்து வலமும், வலமிருந்து இடமும் உள்ளன. மொத்தம் 13 வினாக்கள் உள்ளன.

**மேலிருந்து கீழ்:**

1. மழலைக்கு வேறொரு சொல்.
5. வாகனங்கள் தரையில் ஊர்ந்து செல்ல பயன்படுவது.
6. காட்டின் அரசன்.

**இடமிருந்து வலம்:**

2. நகைகள் செய்ய பயன்படும் உலோகம்.
3. விளையாட்டு பொருள்களுள் ஒன்று.
7. ஏரு உழுவதற்கு பயன்படுவது.
10. முக்கனிகளுள் ஒன்று.

**கீழிருந்து மேல்:**

2. உடலில் முதன்மையான உறுப்பு
4. வில்லோடு இணைந்திருப்பது.
9. நேரத்தைக் காட்டுவது.

**வலமிருந்து இடம்:**

1. குக்கூ என குவும் பறவை.
5. கடலில் கிடப்பது.
8. கா கா என கரைவது.

ஒவ்வொரு வரிசையிலும் மாறுபட்ட ஒன்றை கண்டுபிடிங்க பட்டூஸ்!




## பிப்ரவரி மாதம் மலர்ந்த மொட்டுக்கள் :

பிப்ரவரி மாதத்தில் பிறந்தநாள் கொண்டாடும் நம் பள்ளி செல்வங்களுக்கு, இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்!




- அக்ஷ்ரா சாய் விக்னேஷ்
- கிருத்விக் வினோத்
- குஹவரன் லிங்கேஷ்
- சார்வி குமார்
- சாக்ஷிதா ஸ்ரீ பழனியப்பன்
- சாஷ்வத் சடாட்சரம்
- சாஷ்மிதா சடாட்சரம்
- சாய் மயூரேஷ் சிவசுப்பிரமணியன் தீபிகாவேலம்
- மகிழ்மித்ரன் இளங்கோ
- வித்யூத் முருகராஜ்



## தன்னார்வ குழு உறுப்பினர்கள்

தலைவர் - திரு. கார்த்திக் பாலசுப்பிரமணியன்

செயலாளர் -. திரு. விஜயகுமார் சபாபதி

பொருளாளர். - திருமதி. சாருலதா ரவிஷங்கர்

முதல்வர் - திருமதி. ரமா சுப்பிரமணியன்

நிர்வாகி -. திருமதி. சத்யப்பிரியா மாணிக்கவாசகம்

குறைதீர்க்கும் குழு - அரவிந்த் பழனிசுவாமி, உண்ணாமலை முருகப்பன், கவிதா முருகேசன்

பள்ளிக்குழு - ஐடா மெர்லின் ராஜகுமார், கண்ணன் ராஜசிங்கம், காமேஸ்வரி ராஜாராம், நித்யா வடிவேலு, பவித்ரா இரத்தினவேல், பிரகாஷ் முத்தையன், பிரதீபா முருகன், மனோத் ராஜகோபால், விஜய் ராஜேந்திரன், ஜெப்ரி ஜெயசிங்

உங்கள் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன:
கதைகள், கட்டுரைகள், வரைபடங்கள், விடுகதைகள், சிறு குறிப்புகள், குறுஞ்செய்திகள் போன்ற உங்கள் படைப்புகளை அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் RITAMILSCHOOL@GMAIL.COM என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

FB LINK: HTTPS://WWW.FACEBOOK.COM/RITAMILSCHOOL